No. of Printed Pages : 7

பதிவு எண்

# பகுதி I – தமிழ் – முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language – Part I – TAMIL – Paper I

நேரம் : 3 மணி ]

[ மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI** -க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

1. அகநானூற்று பாடல்களின் திணை அமைப்பு முறையை விளக்குக.

2. ஒறுத்தாரும், பொறுத்தாரும் எய்துவன யாவை ?

3. வீரமாமுனிவரின் இலக்கியப் பங்களிப்பு எத்தகையது ?

4. அந்தாதி – விளக்குக.

5. சிறுவர்களுக்குத் தட்டாம்பூச்சி பிடிக்க நேரமில்லை – ஏன் ?

6. உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் துணைபுரிந்த வள்ளல்கள் யாவர் ?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ?

8. இடஞ்சுட்டி விளக்குக :
   'குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே'

9. வினைத் திட்பத்தின் சிறப்பும், அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.

10. மனந்தளர்ந்த சீதை செய்யத் துணிந்த செயலும் அதனைக் கண்ட அனுமன் செய்கையும் யாவை ?

11. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

14. 'புனித முற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
    புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்'
    - என்று பாவேந்தர் கூறுவனவற்றை எழுதுக.

15. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை ?

16. சிலுவையில் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப் பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

**IV.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** மட்டும் **இருபது வரிகளில்** விடை எழுதுக. **1x8=8**

**17.** 'செய்ந்நன்றி அறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**18.** 'மறப்பரிது நும்நன்றி' - என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளைத் தொகுத்தெழுதுக.

**19.** மனித நேயம் பற்றிக் கவிஞர் கோ. மோகனரங்கன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க. **4x1=4**

**20.** ''வருவை யாகிய சின்னாள்

வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே''

(அ) இச்செய்யுள் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(ஆ) இச்செய்யுள் அடிகளை எழுதிய ஆசிரியர் யார் ?

(இ) யாருடைய கூற்றாக அமைந்துள்ளது ?

(ஈ) 'சென்மே'. – பொருள் தருக.

**அல்லது**

**21.** 'உட்புக வொண்ணாத் தூய

மரகதக் கோட்டை .....'

(அ) மரகதக் கோட்டை எது ?

(ஆ) மேற்கண்ட செய்யுளடிகள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது ?

(இ) மேற்கண்ட செய்யுளடிகளைப் பாடியவர் யார் ?

(ஈ) மரகதம் எந்த நிறத்தைக் குறிக்கிறது ?

VI. 22. ''விற்பெருந்'' – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. 4+2=6

23. ''மறவற்க'' - எனத் தொடங்கும் குறளையும், ''அரண்'' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2+2=4

VII. 24. **எவையேனும் இரண்டு** சொற்களுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) ஓம்புமின் (ஆ) செய்க

(இ) திறந்த (ஈ) வேண்டேன்

(உ) ஒழிந்து (ஊ) வாழ்த்துவம்

25. **எவையேனும் மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

(அ) புனைகலம் (ஆ) செலீஇய

(இ) கதுவிடா (ஈ) கண்ணுதல்

(உ) பேரறிவு (ஊ) அறைந்தறைந்து

26. **எவையேனும் இரண்டு** தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) முதுமரம் (ஆ) பூங்கொடியாள்

(இ) இற்பிறப்பு (ஈ) உயிருண்டு

(உ) பெருந்தெய்வம் (ஊ) ஒன்றென்ப

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

முல்லைத் திணை

**அல்லது**

பொருண்மொழிக் காஞ்சித்துறை.

28. 'பாராங்கல் மீதில் விழும் மழைநீர் போலப்
பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும். 1x4=4

– இப்பாடலில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்று தந்து விளக்குக.

**அல்லது**

எடுத்துக்காட்டு உவமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**VIII.** பொருத்துக. **4x1=4**

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29. இராசராச சோழ னுலா | – | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |
| 30. திருவேங்கடத்தந்தாதி | – | சுந்தரர் |
| 31. மதுரைக் கலம்பகம் | – | ஒட்டக்கூத்தர் |
| 32. திருத்தொண்டத் தொகை | – | குமர குருபரர் |
| | – | காரைக்காலம்மையார் |

**IX.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து வினா குறியீட்டு எண்ணுடன் விடையையும் சேர்த்து எழுதுக. **16x1=16**

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :
(அ) ஒட்டக்கூத்தர் (ஆ) இளங்கோவடிகள் (இ) நக்கீரர்

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் :
(அ) 65 (ஆ) 75 (இ) 11

35. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை :
(அ) 9 முதல் 12 அடிவரை
(ஆ) 13 முதல் 31 அடிவரை
(இ) 4 முதல் 8 அடிவரை

36. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை :
(அ) 70 (ஆ) 25 (இ) 38

37. திருக்குறள் என்பது ________ .
(அ) தானியாகு பெயர்
(ஆ) பண்பாகு பெயர்
(இ) அடையடுத்த ஆகுபெயர்

[ திருப்புக

38. கோவலனும், கண்ணகியும் மதுரை நகரை சென்றடைவதற்கு துணை புரிந்த சமணத் துறவி :

(அ) இளங்கோவடிகள்

(ஆ) கவுந்தியடிகள்

(இ) இராமலிங்க அடிகள்

39. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர் :

(அ) இராவணன் (ஆ) இராமன் (இ) அனுமன்

40. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவன் :

(அ) சூசைமா முனிவர்

(ஆ) தாவீதன்

(இ) இயேசு பெருமான்

41. 18 உறுப்புகளால் பாடப் பெறும் சிற்றிலக்கியம் :

(அ) பரணி (ஆ) உலா (இ) கலம்பகம்

42. குமரகுருபரர் செய்யுட்களின் தனிச்சிறப்பு :

(அ) மெல்லோசை (ஆ) இன்னோசை (இ) வல்லோசை

43. கவிக்கோ அப்துல் ரகுமான் பெற்ற விருது :

(அ) ஞானபீட விருது

(ஆ) மகசேசே விருது

(இ) தமிழ் அன்னை விருது

44. நமக்குத் தொழில் கவிதை ; நாட்டிற்குழைத்தல் என்று பாடியவர் :

(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) பாரதியார்

45. பாவேந்தர் நினைவுப் பரிசினைப் பெற்ற முதற் பாவலர் :

(அ) எத்திராசலு (ஆ) சுரதா (இ) தாரா பாரதி

46. சின்னச்சீறா என்னும் நூலை எழுதியவர் :

(அ) பனு அகுமது மரைக்காயர்

(ஆ) குணங்குடி மஸ்தான்

(இ) உமறுப்புலவர்

47. ஆமூர் மல்லனுடன் போரிட்டு வென்றவன் :

(அ) கோப்பெரு நற்கிள்ளி

(ஆ) இராசராசன்

(இ) சேரலிரும்பொறை

48. தம்பிரான் தோழர் என்று அழைக்கப்படுபவர் :

(அ) சுந்தரர் (ஆ) சம்பந்தர் (இ) அப்பர்

X. **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** **2+2=4**

49. பயன் தூக்கார் செய்த _________ நயன்தூக்கின்
நன்மை _________ பெரிது.

50. எண்ணிய எண்ணியாங் கெய்துப _________
திண்ணியர் ஆகப் _________.

- o O o -